முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி மாசி மாதம் 12ம் திகதி முதல் மாசி மாதம் 19ம் திகதி வரை**

**பிப்ரவரி 24ம் திகதி முதல் மார்ச் 3ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **வீரமரணம் கொண்ட பாரதமே**
**விளை மண் மிகுந்த தமிழகமே**
**சோரம் போகா படைகள் நிறைந்த**
**சுப்பிரமணியர் என் சக்தி கொண்ட**

**2.** **கொண்டநல் பாரதம் தழிழகத்தில்**
**கூறிடுவேன் விளம்பி சால் திங்களில்**
**உண்டான வியதிகதி மேல் மூவாறோர் திகதி வரை**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 12ம் நாள் 24.02.2019, ஞாயிறு முதல் மாசி மாதம் 19ம் நாள் 03.03.2019, ஞாயிறு முடிய)**
**உரைத்திடுவேன் வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த**

**3.** **பலன் குறித்த வார ஆசிதன்னை**
**பகருவேன் சுப்பிரமணியர் யானும்**
**பலமானச் சூழலை பாரத தலைமை**
**பண்புடன் உருவாக்கி எல்லையில்**

**4.** **எல்லையில் இனியும் பதட்டமில்லா**
**எந்த வீரருக்கும் இழப்பு இல்லா**
**வல்லமையும் உரிமையும் வழங்கி**
**வலுகூட்ட வேணும் பாதுகாப்பில்**

**5.** **காப்பின்றி எதிர்மறைபட நடக்கும்**
**கண்ணியமிலா கருணையின்றி நடக்கும்**
**காப்பில்லா தீய சக்திகளை தேசங்களை**
**கண்காணிப்பில் தீவிரம் கூட்ட வேண்டும்**

**6.** **வேண்டிய காலம் அடக்குமுறையால்**
**வேண்டினாலும் யுத்த களம் கண்டும்**
**தொண்டுமிக்க தேச வீர மக்களை**
**தேற்ற வேண்டும் போற்ற வேண்டும் நடுவண் அரசு**

**7.** **அரசவழி அனைத்து துறைகளும்**
**அலட்சியமிலா காக்கப்பட வேண்டும்**
**தரணியிலே மக்களை நோக்கிய**
**தயவு கொண்ட தலைமையே வெல்லும்**

8. வெல்லும் வீழ்த்தும் அநீதியை
வினவிட தமிழக மக்கள் நலம்
வல்லமைபட காக்கும் வண்ணம்
வலிமைதனை பொருளாதார வழி உயர்த்தி

9. உயர்த்தி ஊழலான மாசு நிலையை
ஒவ்வொரு துறைகளிலும் அகற்றி
தயவுமிக்க ஞான ஆட்சியாக
தவராசன் அரங்க ஞானி ஆசி ஏற்று

10. ஏற்றுமே பதவியாளர்கள் தலைமைகள்
இறங்கி மக்கள் சேவை ஆற்றிட
ஆற்றல்பட இந்தியா தமிழகம் வளரும்
ஆளுமையில் சிறந்து மலரும் வார ஆசி முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் மாசி மாதம் 12ம் நாள் 24.02.2019, ஞாயிறு முதல் மாசி மாதம் 19ம் நாள் 03.03.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

வீரம் விளைந்த நாடாகிய பாரத தேசமே எல்லா பயிர்களையும் விளைவிக்கும் வளம் மிகுந்த நிலத்தை உடைய தமிழகதேசமே வீண்போகாத தூய்மையான படைகளை அளவிலாது கொண்ட சுப்பிரமணியராகிய எனது சக்தியை கொண்ட நல்பாரத தேசத்திலும் தமிழகத்திலும் விளம்பி வருடம் மாசி மாதம் 12ம் நாள் 24.02.2019, ஞாயிறு முதல் மாசி மாதம் 19ம் நாள் 03.03.2019 ஞாயிறு முடிய உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

பாரத தேசத்தின் எல்லையில் பலம்மிக்கதான பாதுகாப்பு சூழ்நிலையை பாரததேசத்தினை ஆட்சி புரிவோர் தலைமை பொறுப்புகளில் உள்ளோர்கள் உருவாக்கி எல்லையில் இனியும் பதட்டம் இல்லாத வகையில் எந்த வீரருக்கும் இழப்புகள் இல்லாத வல்லமையையும் உருவாக்கி அவர்களுக்கு உரிமைகளும் வழங்கி வலுவான பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்க வேண்டும்.

நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தும் வகையில் நாட்டிற்கு விரோதமாக எதிர்மறையாக நடக்கின்ற கண்ணியம் இல்லாதவர்களையும் கருணையின்றி நடப்பவர்களையும் நாட்டின் பாதுகாப்பிற்கு பாதகமான தீயசக்திகளையும் தீமையை வளர்க்கும் தேசங்கள் மீதும் கண்காணிப்பில் தீவிரம் காட்டி மிகுந்த எச்சரிக்கையுடன் தீவிரமாக கண்காணித்து வர வேண்டும். தேவையான கால அளவிற்கு மற்றைய நாடுகள் உதவியுடனும், அடக்கு முறைகளினாலும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். தேவைப்பட்டால் போர் செய்தேனும் பாரத தேசத்தின் தேசப்பற்றுமிக்க தொண்டுள்ளம்மிக்க நமது தேசத்தின் வீரர்களை காப்பாற்றி தேற்றிட வேண்டும். தன்னலமற்ற பாரத தேச வீரர்களின் தொண்டினை பாரததேச மக்கள் போற்ற வேண்டும், மத்திய அரசும் வீரர்களை பெருமைபடுத்திட வேண்டும்.

**அரசின் எல்லா துறைகளும் அலட்சியமான போக்கை கைவிட்டு, அலட்சியமின்றி காக்கப்பட்டு கட்டுக்கோப்பான சூழ்நிலை உருவாக்க வேண்டும். மக்கள் மீது தயவு உடைய ஆட்சியை செய்பவர்களே தலைமை வகிப்பவர்களே வென்றிடுவார்கள், அநீதியையும் வெல்லும் சக்திமிக்க தலைவர்களாக ஆவார்கள்.**

**தமிழக மக்களின் நலனினை காத்திடும் வண்ணம் வலிமையை தமிழகம் பெறும் வகையில் தமிழகத்தின் பொருளாதார நிலையை உயர்த்திட அரசு முயற்சி செய்ய வேண்டும். ஊழல்மிக்க நிலையை மாற்றி ஊழலினை எல்லா துறைகளில் இருந்தும் கட்டுப்பாடுடன் அகற்றி நாட்டினில் தயவுமிக்க ஞானஆட்சியாக நடத்திட வேண்டும்.**

**தயவுமிக்க ஞானஆட்சியாக ஆட்சி செய்திட தவம்பல செய்து வெற்றி கண்டிட்ட தவராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஆசிகளை ஏற்று பதவி வகிப்போரும் தலைமைப் பொறுப்பினில் உள்ளோரும் சேவைகளை சிறப்பாய் செய்திட ஆற்றல்மிக்க தேசமாக இந்தியாவும் தமிழகமும் வளர்ந்திடும், நல்லாட்சி நாட்டினில் உருவாகி சிறப்பான ஆட்சி மிக்க தேசமாக மேன்மையடையும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.**

**—சுபம்—**